'J'

# ஐக்கியம் FELLOWSHIP

நாங்கள் வைதீகமானவர்கள். அதாவது நாங்கள் கடவுளுடைய எல்லா வார்த்தைகளையும் கலப்பில்லாமல், தவறில்லாமல் பரிசுத்த கடவுளுடைய வார்த்தையில் எதையும்விட்டு விடாமல் போதிக்கிற வைதீகமான கிறிஸ்தவர்கள். ஐக்கியத்தை குறித்து நாங்கள் எப்போது பேசுகிறோமோ அங்கே அவ்விடத்தில் எங்களுக்கு அபாயமிருக்கிறது. நாங்கள் பிரிந்திருப்பதையும், பின் வாங்குதலையும் குறித்து மாத்திரமே நினைக்கிறோம். நாங்கள் கண்டிப்பாக ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். அது நிச்சயமான ஐக்யமாயிருக்க வேண்டும் என்றும் அதே அளவில் கீழ்கண்டவைகள் தெளிவாக இருக்கிறதா என்றும் பார்க்கிறோம். கண்டிப்பான ஐக்யம் இன்னும் சரியாகச் சொன்னால் அதை வெளிப்படுத்துகிறதான ஐக்யம். கடவுளுடைய வார்த்தை என்ன போதிக்கிறதோ அதனுடன் ஐக்யப்படுகிறவர்களாக ஒத்துப் போகிறவர்களாக, அங்கீகரிப்பவர்களாக இருப்பவர்கள் என்று வெகு நாட்களுக்கு அழைக்கப்பட்டோம். பின் தொடர்கிற கொய்நோநியா அல்லது ஐக்யம் என்ற வார்த்தை அதே அளவில் வேதப் பாடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அற்புதமான, நிச்சயமான பார்வையுடைய வார்த்தையை நாம் தொடர்ந்து பார்ப்போம்.

முதலாவதுஎப்படி ஐக்யம் கடவுளுடன் ஒன்றுபடுவதற்கு பொதுவாயிருக்கிறதை நாம் திருச்சபை என்று அழைக்கிறோம் என்று நாம் கருதுகிறோம். நம்முடைய ஐக்யம் முதலில் செங்குத்தானது. நாம் கடவுளிடத்தில் விசுவாசம் வைப்பதினால் நாம் பரிசுத்த ஆவியினுடைய வல்லமையை ஏற்றுக் கொள்கிறோம்.

வார்த்தையின்மூலம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம் மீட்பர், நம் இரட்சகர் எல்லா பாவங்களுக்காகவும், பிராயசித்தமாகி அவருடைய தியாகமான மரணத்தின் மூலம் நம்மை கடவுளுடன் சமாதானப்படுத்தி ஒன்றாக்கினார்.

பிறகு அது நம்முடைய ஐக்யமானது படுக்கையான வடிவத்திலிருக்கிறது.

நாம் இந்த பூமியின் பகுதியில் கிறிஸ்துவினுடைய புது மணப்பெண்ணாக, இந்த பூமியின்மேல் அவருடைய திருச்சபையாக இருக்கிறோம்.



**இரண்டாவதாக**

திரு விருந்து ஆராதனை பீடத்தில் மிக நெருக்கத்தை வெளிப்படுத்துகிறதாக எங்கள் ஐக்யம் இருக்கிறது. இராப்போஜன விருந்து ஐக்யத்தில் பவுல் கொரிந்தியருக்கு சொல்லுவதை கவனிக்கும்போது – அவ்விடத்தில் தெளிவாக அவர்கள் விக்கிரகங்களை விட்டு பிரிந்து இருப்பதையும் ஆச்சர்யமான நெருக்கத்துடன் அவர்கள் பங்கு கொள்வதையும் நாம் பார்க்கலாம்.

**மூன்றாவது :**

ஐக்யம் என்பது சாதாரணமான அறிமுகமான உபதேச வார்த்தையின் வெறும் சப்தமாயிருக்கக்கூடாது. அது சிறிதளவு இருதயத்தின் வெளிப்பாடாய், செயலாக்கத்தை தன்னுள் வைத்திருக்கிறதாயிருக்கிறது.

ஐக்யம் என்பது பகிர்ந்து கொள்ளுதல் என்று அர்த்தமாகும்.

**கடைசியாக**

நம்முடனான ஐக்யம் என்பது மிகச் சிறப்பான தனிப்பட்ட-உறவு, சுவிஷேசத்தின் ஒரு பங்காளர்கள், ஆவியில் ஒரு பங்கெடுத்துக் கொள்பவர்கள்.

திருச்சபையில் கடவுளோடும், மற்றவர்களுடனும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஐக்யத்தில் அவருடைய வார்த்தையின்மூலம் நம்முடைய கிருபையுள்ள தேவன் நம்மை பெலப்படுத்துவாராக

கடைசி நாட்கள் மட்டும் நாம் இந்த ஐக்யத்தில் இருக்கும்படி கூடவே அவர் நம்மை காப்பாராக.

## I. செங்குத்தான - படுக்கை வடிவிலான ஐக்யம்

கொய்நோனியா என்ற இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் 19 முறை பெயர்ச் சொல் வடிவத்தில் இருக்கிறது. அது பலவகைகளில் அதே அளவில் அப்படியே மொழியாக்கம் செய்யப்படுகிறது.

ஐக்யம், ஒற்றுமை, பங்காளர்கள், பங்கெடுத்துக் கொள்பவர்கள், பகிர்ந்து கொள்ளுதல், பங்கு அளித்தல், பங்கெடுத்துக் கொள்ளுதல். கலந்திருத்தல் (எல்லாம் மொழியாக்கம் ஆகும் ஒற்றுமை நீங்கலாக).

இந்த வார்த்தையை நாம் படிப்பதற்கு எடுத்துக் கொள்ளும்போது நாம் எப்படி நம்முடைய கிறிஸ்துவ திருச்சபையில் நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு காத்திருக்கிறோம் என்பதை சரியாக அறிந்து கொள்கிறோம். அப். 2:42ல் லூக்காவினால் பதிவுச் செய்யப்பட்டுள்ள எருசலேமிலிருக்கிற ஆலயத்தினுடைய விவரணத்தை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோநியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும், உறுதியாக தரித்திருந்தார்கள் அப் 2:42.

அந்த ஐக்யம் ஆனது முதன்முதலாக அங்கே செயலாக்கத்திற்கு வந்ததை நாம் இங்கே பார்க்கிறோம்.

ஐக்யம் என்பது சாதாரணமாக ஒருவருடைய பெயரை கிருஷ்த்துவ திருச்சபை புத்தகத்தின் மேல் இருக்கிற விஷயமில்லை. நாம் நம்முடைய உறுப்பினர் சேர்க்கை பதிவேட்டிலிருந்து பெயர்களை நீக்கிவிடுகிறோம். ஏனென்றால், தனிப்பட்ட நபர்கள் வெகு காலத்திற்கு ஐக்கியத்தை நம்மோடு செயல்படுத்த முடியாது.

ஒரு கிறிஸ்துவ திருச்சபையில் உறுப்பினராய் இருப்பதற்கு பெயர் மாத்திரம் மூழ்கி போக கூடிய விஷயமாயிருக்கிறது. இந்த பூமியில் கடவுளுடனும், அவருடைய குமாரனுடனும் அவருடைய குழந்தைகளுடனும் ஐக்யமாயிருப்பது மிகவும் கடினமான விஷயமாயிருக்கிறது. நாம் பெற்றிருக்கிற இந்த ஐக்யம் காப்பி அருந்துவதின்மேல் இல்லை. ஆனால், தேவனுடைய வார்த்தையின் மேல் ஆதாரப்பட்டிருக்கிறது. எருசலேம் தேவாலயத்தில் இருந்த ஜனங்கள் நிலையாக தொடர்ந்து தங்களுக்குள் ஒரு மனப்பட்டவர்களாய், ஏகமனதுடன் கடவுளை ஆராதிக்கிறவர்களாக, அப்போஸ்தலருடைய போதனையில் அதாவது கடவுளுடைய வார்த்தையில் நிலைத்திருக்கிறவர்களாக தொடர்ந்து இருந்தார்கள். ஒரு பிரதிபலனும் எதிர்பார்க்காத விசுவாச அர்த்தமுள்ள கடவுளுடைய வார்த்தையை கேட்டார்கள். விசுவாசத்தை பெலவீனப்படுத்தக்கூடிய



அர்த்தமுள்ள வார்த்தைகளை அவர்கள் கேட்கவில்லை. அடர்த்தியில்லாத விசுவாச அர்த்தம் இருக்கிறவார்த்தைகளை கேட்கவில்லை.

நம்முடைய விசுவாசம் வளர்ந்து வருவதற்கு அப்படியே நாம் தினந்தோறும் வேதப்புத்தகத்தை ஆராய்ந்து பார்க்கிறவர்களாகவும், நம்முடைய ஐக்யம் அவருடனும், அவருடைய குழ்நதைகளுடனும் அதைப்போலவே மறுபடியும் அமுலுக்கு கொண்டு வருகிறதாகவும் இருக்கிறது.

கடவுளுடனான இந்த ஐக்யத்தில் அநேகம் பேர் வார்த்தையுடன் கூடிய ஞானஸ்ஞானத்தின் மூலம் நுழைகிறார்கள். 1 கொரி. 1:9.

உம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்யமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

அவருடைய குமாரன் மூலமாக இந்த ஐக்யத்திற்குள் நம்மை அழைப்பது மிக முக்யமான தோற்றமுடையதாய் இது இருக்கிறது. நம்முடைய விசுவாசத்தினுடைய மூலைக் கல்லாய் அவர் இருக்கிறார். அவர் மேல் நம்முடைய முழுமையான இரட்சிப்பும் சார்ந்திருக்கிறது. அங்கே அவ்விடத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இல்லையென்றால் அங்கே திருச்சபையில்லை. விசுவாசமில்லை. நம்பிக்கையில்லை.

அவரோடு நாம் வைத்திருக்கும் தனிப்பட்ட உறவு அதிமுக்யமானது, முதலாவது நாம் மேலே பார்ப்போம். யோவான் இந்த செங்குத்தான, படுக்கை வடிவிலான ஐக்யத்தை எழுதுகிறார்.

மிக நேர்த்தியாக, மிக அழகாக இந்த செங்குத்தான படுக்கை வடிவிலான ஐக்யம் சிலுவையை உண்டாக்குகிறது. எது நம்முடைய பரிசுத்த மார்கத்திற்கு (மதத்திற்கு) அடையாளமாயிருந்து நாம் கிறிஸ்துவுக்குள் பொதுவான ஐக்யத்தில் இருப்பதை ஒரு படமாக காட்டுகிறது. நாங்கள் அதிகார பூர்வமாக உங்களுக்கு அறிவிக்கிறோம் என்று யோவான் எழுதுகிறார். 1 யோவ. 1:3.

நீங்களும் எங்களோடே ஐக்யமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம், எங்களுடைய ஐக்யம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.

அதுச்சரியாக இந்த சுவிஷேசத்தினுடைய அதிகார பூர்வமான அறிவிப்பின்மூலம் அந்த ஐக்யம் பரிசுத்த ஆவியானவரின் மூலம் உண்டாக்கப்படுகிறது.

ஒரு முறை நாம் அவரோடு ஐக்யம் உடையவர்களானால் நம்முடைய ஜீவியம் சாதாரணமாக மாறும். மக்களுடன் நம்முடைய தொடர்புகள், உறவுகள்கூட மேம்படும், மாறும்,

அவரிடத்திலிருந்து நாம் கேட்கும் செய்தி இதுவாகும். உங்களுக்கு அதிகார பூர்வமாய் அறிவிக்கப்படும்.

அந்த கடவுள் வெளிச்சமாயிருக்கிறார். அவருக்குள் இருப்பவர்கள் எப்போதும் இருட்டில் இருக்க வேண்டியதில்லை. ஆயினும் நாம் அவருடன் ஐக்யம் உள்ளவர்கள் என்று சொல்கிறோம். சற்றாகிலும் நாம் இருளில் நடக்கலாமா அப்படி இருந்தால் நாம் வார்த்தையின் படி ஜீவிக்கவில்லை.

என்று அர்த்தம் நாம் பொய்ச் சொல்கிறோம். அப்படியே அவர் வெளிச்சத்தில் இருக்கிறார். நாமும் ஒருவரோடு ஒருவர் ஐக்யம் உள்ளவர்களாய் இருக்கிறோம்.

அவருடைய குமாரனாகியஇயேசு கிறிஸ்துவினுடைய திரு இரத்தம் நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிக்கிறது. 1 யோவா. 1:5–7.

மற்ற வார்த்தையினால் நீ உன்னுடைய மகனை கொலை செய்துவிட்டு கடவுளுடன் ஐக்யமுடையவனாய் இருப்பாயா?

ஒரு விபச்சாரியை சந்தித்து விட்டு வந்து திருவிருந்து மேசையை பார்க்க முடியுமா?

ஆயினும் ஒரு பாவம் கடிந்து கொள்ளப்பட்டு ஆனால் அதற்காக பச்சதாபப்படவில்லையென்றால், மனஸ்தாபப்படவில்லையென்றால், அந்த ஐக்யமானது கேள்வி கேட்கப்படுவதற்கு உரியதாகிறது.

ஆயினும் உண்மையான பாவத்தை ஒத்துக் கொள்ளாமலும், அதற்காக மனவருந்தாமலும், பச்சதாபப்படாமலும் பாவத்திலிருக்கிற ஒருவன் எப்படி இரட்சகரோடு ஐக்யமாயிருக்க முடியும்?

குற்றத்தை உணர்ந்து வருந்தாத ஒருவனுடைய ஜீவியத்தில் ஏசு கிறிஸ்துவிலும் விளைவு இருக்காது.

கடவுளுடனான அவனுக்குள்ள ஐக்யத்திலிருந்தும், அவருடைய திருச்சபையிலிருந்தும் அது அவனை நீக்கி விடுகிறது. நாம் வெளிச்சத்தில் இருந்தாலும், அல்லது இருளில் நடந்தாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய திரு இரத்தம் மாத்திரம் நம்மை எல்லா பாவங்களிலிருந்தும், நம்மை சுத்திகரிக்கிற தாயிருக்கிறது. ஆனால் நாம் அந்த சுத்திகரிப்பை, பரிசுத்தமாகுதலை தள்ளிவிடுபவர்களாக இருக்கிறோம். நாம் ஒரு பக்கமாக அவருடைய மன்னிப்பை கைவிட்டு விடுகிறோம். வெளிப்படையாக நம்முடைய பாவத்தை கடவுளிடத்திலும், மற்ற ஒருவரிடத்திலும் அறிக்கையிடுவது நம்முடைய ஐக்யத்தினுடைய மிக முக்கியமான பகுதியாயிருக்கிறது.

நம்மிடத்தில் நாம் பாவம் இல்லையென்றோமானால், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்பவர்களாக இருப்போம். உண்மை நம்மிடத்தில் இருக்காது. ஆயினும் நாம் நம்முடைய பாவத்தை அறிக்கையிட்டால், அவன் சரியான விசுவாசம் உடையவனாயிருப்பான். நம்முடைய பாவம் நமக்கு மன்னிக்கப்படும். அநீதியான எல்லாவற்றிலிருந்தும் நம்மை சுத்திகரிக்கும்.

ஆயினும் நாம் நம்மிடத்தில் பாவம் இல்லையென்று சொல்வோமானால், பொய்யர்களாயிருப்போம். அவருடைய வார்த்தை நம்மிடத்திலிருக்காது. 1 யோவ. 1:8–10.

கடவுளோடும் அவருடைய ஜனங்களோடும் ஐக்யமாயிருக்க பாவம் சாதாரணமாக அறிக்கையிடப்பட வேண்டும். ஆயினும் நான் பாவம் செய்தால் அன்றிலிருந்து அன்று வரை பாவம் செய்கிறவர்களாயிருந்தால் அது உண்மையான பாவ அறிக்கை அல்ல. நாம் எப்படி பாவம் செய்வதற்கு அனுமதிக்கக்கூடவே நாம் சரியாக நம்முடைய பாவத்திற்கு தகுதியுடையவர்களாய் இருக்கிறோம் என்று கண்டிப்பாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும்.

நாம் பாவிகள் என்று எப்படி நாம் தெரிந்து கொள்ள முடியும்?

நாம் வார்த்தைக்கு திரும்பவும் வருவோம்.

அதே அளவில் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருந்து அவருடைய வார்த்தையின் மூலம் நம்முடைய இருதயத்திற்குள் பிரகாசிப்பிக்கச் செய்கிறவராயிருக்கிறார். ஆகவே கூடவே அவருடைய வார்த்தை நம்முடைய பாதங்களுக்கு தீபமாயிருக்கிறது. நம்முடைய பாதைக்கு வெளிச்சமாயிருந்து நம்முடைய தவறுகளை வெளிப்படுத்துகிறது. பரிசுத்த பத்து கட்டளைகளின் மூலம் நம்முடைய ஜீவியத்தை நாம் எப்போது அளவெடுக்கிறோமோ அப்போது நாம் அவைகளை கண்டிப்பாக பற்றிக் கொள்ள வேண்டும்.

செயலின்மூலமும், வார்த்தையின்மூலமும், நினைவின் மூலமும் நான் அந்த பாவம் செய்தேன் என்று உணர வேண்டும்.

கடவுளுடைய பரிசுத்தத்திற்கு எதிரான அந்த மச்சத்தை கறுப்பை நான் தெளிவாக பார்க்கிறேன். யாருடைய இரத்தம் நம்மை எல்லா பாவத்தினின்றும் சுத்திகரித்ததோ அந்த ஆண்டவராகிய ஏசு கிறிஸ்துவை உண்மையான கருவூலமாக நாம் கொண்டு இருப்பதினால் மாத்திரமே அது முடிகிறதாயிருக்கிறது.

என்னுடைய வெறுப்புக்கு எதிராக அங்கே அவருடைய விருப்பம், அன்பு இருக்கிறது. என்னுடைய பெலவீனத்திற்கு எதிராக அங்கே அவ்விடத்தில் அவருடைய பெலம் இருக்கிறது. என்னுடைய தீங்கான செயலுக்கு எதிராக அங்கே அவருடைய நீதியிருக்கிறது. நம்முடைய ஜீவியத்தில் நாம் சுவிஷேசத்தினுடைய வல்லமையை தெரிந்து கொள்ளும்போது இங்கே ஒரு கடைசி புள்ளியை அது நமக்கு கொண்டு வருகிறது.

வார்த்தையின் மூலம் அவருடன் இந்த ஐக்யத்திற்கு அழைக்கப்படுவதென்பதின் அர்த்தம் உபத்திரவம், அல்லது துன்பம் என்பதாகும். அப்படியே நீங்கள் அவரை உபசரித்தீர்கள். ஆகவே அவர் உங்களை உபசரிப்பார். நீங்கள் மேலே இருக்கும் தலைவர் அல்ல. பிலிப். 3:10.



இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்யத்தையும், அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்.

கடவுளுடைய இந்த ஐக்யத்தில் இருப்பதென்பதின் அர்த்தம் உபத்திரப்படுவது, அல்லது கஷ்டப்படுவது என்பதாகும். அப்படியே ஆண்டவராகிய ஏசு கிறிஸ்து பரிகாசம் செய்யப்பட்டார், நாமும் பரிகாசத்திற்கு எதிர்பார்ப்போடு இருக்கிறவர்களாயிருப்பது அவசியம். அப்படியே அவர் மரணத்திலிருந்து ஒரு குழந்தை எழுப்பினபோது ஏளனச் சிரிப்பு சிரித்தார்கள்.

ஆகவே நாமும் நம் உறுதியான வார்த்தையில் உறுதியான குற்றவாளி எனத் தீர்மானித்து நாமும் கூட அத்தகைய ஏளன இகழ்ச்சிக்கு எதிர்பார்ப்போடு இருத்தல் அவசியம். ஒன்று அல்லது அதிக வருகையாளர்களை நாம் சந்திக்க முடியும். ஏனென்றால், நாம் எல்லோரும் அவருடன் ஐக்யப்பட்டிருக்கிறோம். அப்படியே அவர் வெற்றி சிறந்து தோற்கடித்தார். நாமும் வெற்றி சிறந்து தோற்கடிப்போம். ஏனென்றால், அவருக்குள் நாம் முன்பாகவே வெற்றி சிறந்திருக்கிறோம். அப்படியே அது துன்பமாயிருந்தாலும், கஷ்டமாயிருந்தாலும், அப்படியே அது நம்மை அவருக்குள் நெருக்கமாய்க் கிட்டச் சேர்க்கிறது. ரோமர் 5:3—5.

அது மாத்திரமல்ல. உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற படியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

ஐக்யம் என்ற வார்த்தைக்கு கெட்ட அர்த்தம் மறைபொருளாக கொள்வது எவ்வளவு துக்கரமாயிருக்கிறது. அது அப்படி இருக்கக்கூடாது. அது எல்லா வழிகளிலும் திட்டமானதாய், நிச்சயமானதாயிருக்க வேண்டும் இருக்கிறது. என்ன சில நம்முடைய உபதேசத்திற்காக புரிந்து பேசுவதை அச்சமயங்களில் நாம் பார்க்கலாம். எவ்வளவு தப்பானது. நாம் சார்ந்திருக்கிற உபதேசத்தைக் குறித்து நாம் வெட்கப்படுவதற்கு

ஒன்றுமில்லை. அப்படியே அவைகள் நேரிடையாக கடவுளுடைய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டவைகள். நம்முடைய இரட்சகருக்காகவும், நம்முடைய பாவங்களை கேட்பதற்காகவும், வார்த்தையின்மேல் இருக்கிற ஐக்யத்தினால் நாம் திருச்சபைக்கு வருகிறோம். நம்முடைய ஐக்யத்தில் வருகின்ற வாரத்தில் வருகின்ற வார்த்தையினுடைய வெளிச்சத்தினால் நாம் சரியான திசை, வழிகாட்டுதலை பெறுகிறோம்.

நம்முடைய பிதாவினுடைய அரியாசனத்திற்கு முன்பாக நாம் நம்முடைய ஜெபங்களை ஏரெடுக்கிறோம். நம்முடைய பாவங்களை, நம்முடைய நம்பிக்கையை, நம்முடைய நோக்கத்தை, அல்லது மற்றொன்றை, நம்முடைய ஆறுதலை. நம்முடைய கவனிப்பை அவருக்கு ஒப்புக் கொடுக்கிறோம்.

<u>III. திருவிருந்து ஆராதனை வைபவத்தில் பங்கு கொள்வது விக்கிரகங்களிலிருந்து பிரிந்திருப்பது ஒரு தெளிவாகவும், அவருடனும், அவரோடும் ஒரு சிறப்பான நெருங்கிய நட்பராயிருக்கிறது.</u>

ஐக்யம் என்பதின் பொருள் செயல்படுதல் என்பதாகும். ஆகவே நாம் பார்க்கிறோம். அவருடைய வார்த்தையை மேலே ஊற்றுவதினால், நேரிடையாக அவருடைய ஐக்யத்தில் உறவு படுத்துகிற செயலாய் அது இருக்கிறது. இங்கே நாம் பார்க்கிறோம். நம்முடைய ஐக்யம் கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்கெடுத்துக் கொள்ள கலந்து கொள்வதை நாம் பார்க்கிறோம். அந்த நம்முடைய ஐக்யம் கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்கு கொள்ள கலந்து கொள்வதை நாம் பார்க்கிறோம். ஆகிலும் நாம் இயேசுவை பின் பற்றுபவர்களானால், இந்த உலகத்திலுள்ள விக்கிரகங்களினிடத்தி லிருந்து நாம் தெளிவாக பிரிந்திருந்து, விலகியிருப்பது கடமையாகிறது. கடவுளுக்கும் பணப் பேய்க்கும், அல்லது தனதுர்தேவதைக்கும் ஊழியம் செய்ய நம்மால் முடியாது. இயேசுவே சுயமாய்ச் சொல்லியிருக்கிறார். அற்ப விசுவாசிகளே இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும். காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? மத். 6:30.

மறுபடியும் நாம் இயேசு கிறிஸ்துவுடன் ஐக்யமுடையவர்களாயிருப்பின் பிறகு நாம் ஒரு போதும் விக்கிரக ஆராதனை செய்யக்கூடாது. நம்முடைய கர்த்தரின்மூலம் நாம் ஒரு தெளிவான எல்லையை வரையறுக்க வேண்டும். முடிவுக்கும் மத்திக்கும்



இரண்டுக்கும் எதிரான விளையாட்டு விளையாடுபவனாய் ஒரு கிறிஸ்தவன் இருக்க முடியாது.

பவுல் சிறப்பாக மறுபடியும் மறுபடியும் அதை அமைத்துக் காட்டுகிறார். 2 கொரி. 6:14–18.

அவ்விசுவாசிகளுடன் இசைந்திருக்க சம்மந்தம் உடையவர்களாய் இருக்கக்கூடாது. நீதிக்கும் அநீதிக்கும் என்ன பங்கு இருக்கிறது? அல்லது வெளிச்சத்திற்கும் இருளுக்கும் என்ன சம்மந்தம் ஐக்யம் இருக்கிறது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் சம்மந்தமேது? அல்லது விசுவாசிக்கும் அவ்விசுவாசிக்கும் சம்மந்தமேது? கடவுளுடைய ஆலயத்திற்கும், விக்கிரகங்களுக்கும் என்ன இசைவு இருக்கிறது? ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாய் நாம் இருக்கிறோம் என்று அப்படியே கடவுள் சொல்லியிருக்கிறார். நான் அவர்களுக்குள் ஜீவிக்கிறேன். அவர்களை இயக்குகிறேன். நான் அவர்களுடைய கடவுளாயிருக்கிறேன். அவர்கள் என்னுடைய ஜனமாயிருக்கிறார்கள். ஆகவே. அவர்களை அவர்களிடத்திலிருந்து தனியாக பிரித்தெடுத்தேன் என்று கர்த்தர் சொல்கிறார். அவர் தொட்டபிறகு ஒருவனும் அசுத்தமாயிருப்பதில்லை. பிறகு நான் உங்களை வரவேற்பேன். நான் உங்கள் பிதாவாயிருப்பேன். நீங்கள் என்னுடைய குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்கள், என்று சர்வ வல்ல கர்த்தர் சொல்கிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறார். ஆகவே நாம் வெளிச்சத்தில் இருக்கிறோம். ஏனென்றால், நாம் விசுவாசத்தின்மூலம் கடவுளுடைய பிள்ளைகளாய் நாம் இருக்கிறோம். அவர் நம்மை தம்முடைய குமாரர்கள் என்றும், குமாரத்திகள் என்றும் அழைக்கப்படுகிறது. என்ன ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட குறிப்பிட்ட உன்னத உறவு கடவுளுடன் நமக்கிருக்கிறது. நாம் கருவூலமாய் சேமித்து வைத்திருக்கிற ஐக்யமாய் இது இருக்கிறது. அப்படியே எந்த ஒரு குடும்பத்திலும் இவ்வகையான உன்னத உறவு பெற்றோர்களுடன் உயிர் வாழ அவசியமாயிருக்கிறது. ஆகவே எதிர்காலம் சொல்லுகிறதுடன் இருக்கிறது. ஆகவே, அது குருச்சபையாயும் இருக்கிறது. நம்முடைய பிதாவுக்கும், அவருடைய குமாரனுக்கும் விசுவாசமுள்ளவர்களாகவும், ஆராதிக்கிறவர்களாக பூர்வமான இணையற்ற போட்டியாய் இருக்கக்கூடாது. அல்லது அப்படியே நம்முடைய திருச்சபையிலும் குடும்பத்து தலைமையை பிடுங்கிக் கொள்வதாய் இருக்கக் கூடாது.

கிறிஸ்துவுக்கு சாத்தானுடனும், அவனுடைய பிசாசு கூட்டத்துடனும் இந்த உலகத்தில் உள்ள விக்கிரகங்களுக்கு பின்னால் இருக்கிற சாத்தானுடனும், அவனுடைய கூட்டத்துடனும் கிறிஸ்துவுக்கு என்ன பொதுவானது இருக்கிறது? எந்த சம்மந்தமும் இல்லை. உண்மைக்கு அதிகமாக பொய்யுடன் எந்த பொதுவானாலும் இல்லை. நீதிக்கு அநீதியுடன் எந்த பொதுவான உறவுமில்லை. அது திருவிருந்து ஆராதனை மேசையாயிருந்தாலும், அல்லது நம்முடைய பொதுவான ஐக்யத்தில் அவ்விடத்தில் விக்கிரகங்களுக்கு ஒரு தெளிவான பங்கு பெறுவதையும், அவ்விடத்தில் ஒரு சிறப்பான நெருக்கத்தையும், நட்புடன் பங்கு பெறுவதையும் அதே அளவில் குடும்பத்திலும் இருக்கிறது. கடவுளுடைய குடும்பம்.

கொரிந்திய சபைக்கு விக்கிரகங்களை குறித்து கொடுக்கப்பட்ட முதலாவது எச்சரிக்கையாய் இது இருக்கவில்லை. பவுல் தன்னுடைய முதல் நிரூபத்தில் 10வது அதிகாரத்தில் இதைக் குறித்து எச்சரிக்கிறார். 1 கொரி. 10:6.

அவர்கள் இச்சித்ததுபோல் நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாயிருக்கிறது.

1 கொரி. 10:14.

ஆகையால், எனக்குப் பிரியமானவர்களே, விக்கிர ஆராதனைக்கு விலகி ஓடுங்கள்.

இஸ்ரவேலினுடைய முந்தைய பழையவர்கள் ஒரு ஆரம்ப உதாரணமாய் முடிவுக்கும், மத்திக்கும் இரண்டு பக்கத்திற்கும் எதிராக இரண்டு வழிகளிலும்

அவர்கள் முயற்சி செய்தார்கள். முகாமலிருந்த அந்த ஜனங்கள் பின்னால் விக்கிரக ஆராதனை செய்தபோது, பொன்னினால் செய்த கன்றுக் குட்டியை ஷேவித்தபோது கடவுள் மோசேயின்மூலமாக சீனாய் மலையில் வைத்து அந்த ஜனங்களுக்கு நியாயப் பிரமாணத்தை கொடுத்தார். மேலும் மேலும் மறுபடியும் மறுபடியும் நாற்பது வருடங்களாக அந்த விக்கிரக ஆராதனை போராட்டம் தொடர்ந்து வருவதை நாம் பார்க்கிறோம். உண்மையாகவே அது இஸ்ரவேலருடைய சரித்திரத்திலும் தொடர்ந்து வந்தது. அது ஒரு எச்சரிக்கையாக பைபிளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.



அவ்விடத்தில் அங்கே இன்று வரை அதே மாதிரி பொதுவான கடவுளை உடைய ஜனங்கள் நம்மை சுற்றிலும் இருக்கிறார்கள். அவர்கள் பொன்னினால் மூடப்பட்ட சிலைகளை எடுத்துக் கொண்டு செல்லாமல், இன்றும் சரியாக கூறுமிடத்து தங்கத்தை தன்னுள் கொண்டிருக்கிற கடவுளாயிருக்கிறது. அவைகளை அவர்கள் பழைய பெயரான பாகால் போன்ற ஒத்த பெயரின்மூலம் அழைப்பதில்லை. ஆயினும் இன்று வரையிலும் அந்த விக்கிரகங்கள் நம்மிடத்தில் இருக்கின்றன. விக்கிரகங்களை சந்தோஷப்படுத்துவதற்காக அவைகளை மாற்றிவிட்டு அவைகளை கடவுளாக பூஜிக்கிறார்கள். ஆடம்பரமான ஒரு கடவுள் நம்முடைய பிரயத்தனங்களை, முயற்சிகளை, தனதாக்கிக் கொண்டுள்ளது. அந்த இராஜ்ஜியத்தினுடைய வேலையை நாம் அலட்சியப்படுத்த வேண்டும். பெருமை ஒரு விக்கிரகம் ஆகும். எப்போது அது நம்முடைய இயற்கையான பரிசின்மேல் உறைபோட்டிருப்பதையும், யார் அதை நமக்கு கொடுத்தாரோ அவரையும் நாம் மறந்துவிட்டோம்.

நாம் அதை இப்போது நினைப்பது இல்லை. நாம் மிகவும் வலிமையாக இருக்கிறோம். அந்த சம்பவம் நமக்கு நேரிடாது. எவ்வளவு வலிமை என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பேதுரு நினைக்கிறார். ஆயினும், அவர் மிகவும் வலிமையுடையவர் என்று சொல்கிறார். நான் ஒருபோதும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என் கர்த்தாவே என்று சொல்கிறார். ஆயினும் சொல்லி முடித்த ஒரு சில மணி நேரங்களுக்குப்பிறகு அவரை அவன் மூன்று தரம் சத்யம் செய்து மறுதலித்தான். ஆம் இந்த மனிதன் தான் அப்போஸ்தலர்களுடைய குழுவின் தலைவனாய் இருந்தான். பல ஆண்டுகள் ஆண்டவரோடு நடந்தான். அவரோடு சம்பாஷித்தான். அவர் உபதேசத்தை கேட்டான். அவர் செய்த அற்புதங்களை, கிரியைகளை பார்த்தான். ஆனாலும், மறுதலித்தான். 1 கொரி. 10:12.

இப்படியிருக்க தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.

தாவீது கடவுளுடைய இருதயத்திற்கு ஏற்றவன் அவன்கூட பிறகு விழுந்து போனான்.

நம்முடைய விக்கிரகங்களை வெளியே எறிய வேண்டும்என்று நாம் மறுபடியும் எச்சரிக்கப்படுகிறோம். இஸ்ரவேலின் பிள்ளைகள் முனு முணுப்போடு வந்ததைப் போல் வரவேண்டாம், சரியாக கூறுமிடத்து பாவ அறிக்கையோடும், பாவத்தை ஒப்புக் கொண்டும் வரவேண்டும் என்னை மன்னித்துவிடுங்கள் நான் பிடிக்கப்பட்டேன் என்பது உண்மையான பாவ அறிக்கை அல்ல. என்பது உண்மையான பாவ அறிக்கை அல்ல. ஆனால், என்னை மன்னித்து விடுங்கள். நான் செய்துவிட்டேன் என்று உண்மையாக மன வருத்தப்படுவது என்பதின் அர்த்தம் பாவம் தப்பு என்று பார்க்க வேண்டும். மறுபடியும் அந்த பாவத்தைசெய்யக்கூடாது. செய்யத் தேவையில்லை. நாம் அதேப் போன்ற மனநிலையில் திருவிருந்தில் பங்கு கொள்ள வேண்டும். அதாவது வரி வசூலிப்பவன் மனநிலையில் கடவுளே நான் பாவி என்மேல் இரக்கமாயிரும். அவனுடைய மனமாற்றத்தில் பாவத்தைக் குறித்த பச்சதாபம், இருதயத்தினுடைய கீழ்படிதலான ஒரு விஷயமாயிருக்கிறது.

இப்படிப்பட்ட மனப்பாங்குடன் நாம் பிறகு நம்முடைய ஐக்யத்துடன் கடவுளுடைய திருவிருந்துக்கு வர வேண்டும். பரிசேயர்கள் ஆலயத்திற்கு வந்து ஜெபித்ததைப் போல் நாம் கடவுளுக்கு ஆதரவாக நாம் செபல்படுவதாக வரக்கூடாது. அவருடைய லாயக்கற்ற அன்பையும், அவருடைய யோக்கியதையற்ற ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்காகவும், நாம் வருகிறோம். திருவிருந்து ஆராதனையில் நாம் கடவுளுடன் ஒன்றுபடுகிறோம். என்னவிதமான நெருங்கிய நட்பு இங்கே இருக்கிறது. பாத்திரத்தினுடைய ஆசிர்வாதம், நாம் ஆசிர்வதிக்கிறோம். இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் பங்கெடுத்துக் கொள்வதாக இது இல்லையா? நாம் பிட்கிற அப்பம் இயேசுவினுடைய சரீரத்தில் பங்கெடுத்துக் கொள்வதாக இல்லையா? 1 கொரி. 10:16. நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்யமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்ய மாயிருக்கிறதல்லவா?

ஆச்சர்யமான, இரகசியமான வழியில் கர்த்தருடன் நாம் ஒன்று பட்டு அவரை நாம் பெற்றுக் கொள்கிறோம். என்ன ஒரு சிறப்பான வசதி அவ்விடத்தில் அவருடன் நாம் நெருங்கி இருப்பதற்கு யார் ஒருவன் தன்னுடைய எல்லா பாவங்களுக்காகவும் மனஸ்தாபப்படுகிறானோ அவன் ஜாக்கிரதையாக திருவிருந்து சாக்கிரமெந்துவில்



என்ன இருக்கிறது என்பதை ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். என்ன ஒரு மிகப்பெரிய நெருக்கத்துடன் கூடிய நட்பு நம்முடைய பாவ மன்னிப்புக்கென்று அவருடைய சொந்த சரீரத்திலும், இரத்தத்திலும் நாம் பங்கெடுத்துக் கொள்கிறோம் என்பது எவ்வளவு பெரிய ஆதரவாயிருக்கிறது.

மனஸ்தாபப்படாதின் மூலம், விசுவாசமில்லாததின்மூலம் நாம் ஒன்று சேர்வதானது, நம்முடைய இருதயத்திற்கு மிகப் பயங்கரமானதாயிருக்கிறது. விக்கிரகங்களுக்கு விலகியிருப்பதைப் பற்றி விவரித்தப்பிறகு 1 கொரி 10 ஆம் அதிகாரத்தில் சரியான திருவிருந்தில் அவசியத்தை பவுல் கவனிக்கிறார். பவுல் பிறகு 1 கொரி 11ம் அதிகாரத்தில் நம்மை நாமே சோதித்தறிந்து இந்த திருவிருந்து ஆராதனையில் மிகவும் கடினமான இந்த விஷயம் நிறுவப்பட்டுள்ளது என்ற பவுல் விவரிக்கிறார். ஒரு மனிதன் தன்னைத் தானே சோதித்தறிந்து ஆகவே இந்த அப்பத்தை புசிக்கவும், இந்தப் பாத்திரத்தில் பாணம் பண்ணவும் வேண்டும். யாராயிருந்தாலும் சூட்சும புத்தியில்லாமல் புசிக்கவும், குடிக்கவும் வேண்டும். புசிக்கிற இந்தச் சரீரம், குடிக்கிற இந்த திரு இரத்தம் தன்னைத்தானே நியாயந் தீர்க்கிறதாயிருக்கிறது. ஆகவே ஏன் உங்களில் அநேகம் பேர் பெலவீனர்களாகவும், வியாதியஸ்தர்களாகவும், சில பேர் மரணத்திற்கும் பாத்திரராகிறார்கள்.

1 கொரிந். 11:28–30.

யார் தாங்கள் செய்த பாவத்திற்காக உண்மையாக மனஸ்தாபப்படுகிறார்களோ அவர்கள் மிகுந்த தாழ்மையுடன் கர்த்தரை சார்ந்திருந்து அவருக்குள் இருக்கிற பாவ மன்னிப்பின் நிச்சயத்தை தருகிற திருவிருந்து மேசையின் கிட்ட நெருங்குவது என்பது அர்த்தமாகும். உங்கள் பெலவீனங்களோடு நீங்கள் வந்தால், அவருக்குள் நீங்கள் பெலனடைவதை தெரிந்து தெரிந்து கொள்வீர்கள். மிக நிச்சயமான நிச்யுத்தை வந்து பெற்றுக் கொள்ளுங்கள். நாம் ஒன்றாய் முழங்காலில் நின்று அந்த நிச்சயத்தை பெற்றுக் கொள்கிறோம்.

1 கொரி. 10:17.

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமாயிருக்கிறோம்.

நாம் எல்லோரும் அவருக்குள் ஒன்றுபடுகிறோம். ஆகவே திரு விருந்தில் செங்குத்தான படுக்கை வடிவிலான இரண்டு விதமான ஐக்யத்தை நாம் பார்க்கலாம். கவனிக்கவும். நாம் மறுபடியும் பார்க்கிறோம். மறுபடியும், மறுபடியும் நாம் பார்க்கலாம். அந்த ஐக்யமென்பதின் அர்த்தம் செயலாற்றுதல் அல்லது செயலாக்கம் ஆகும்.

மனஸ்தாபப்படுதல், பச்சதாபப்படுதல், அறிக்கையிடுதல், திருவிருந்து மேசையினிடத்தில் கிட்டச் சேர்க்கிறதாயிருக்கிறது. எவ்வளவு வருத்தம் நாம் பல ஆண்டுகளாக கொஞ்சம் பேரை திருவிருந்து மேசையின் கிட்டே பார்க்காதது. மிகவும் வருத்தமாயிருக்கிறது. வயதானவர்களுடன் இளைஞர்களும் வரிசை கிரமமாக நம்மால் அந்த மேசையின் அருகில் அவர்களை பார்க்க முடியாது. மிகவும் எவ்வளவு வருத்தமாயிருக்கிறது. அவர்கள் பெலமுள்ளவர்கள் என்று நினைக்க முடியுமா? ஆகவே அது அவர்களுக்கு தேவையில்லையா? ஆயினும் அந்த பெருமை கர்வம் என்கிற விக்கிரகம் விஷயத்தில் சுய நிச்சயத்தையும், சரீர பெலத்தையும் ஒருவன் ஒருவனுடைய ஜீவியத்தில் ஒன்று குவித்து வைக்கலாமா? அந்த விக்கிரகங்களை கைவிட்டு விட்டு ஒரு பக்கத்தில் தள்ளிவிட்டு, உங்களுடைய எல்லா பெலவீனத்தையும் தேவையையும் பாருங்கள். மனந்திரும்புங்கள், மனஸ்தாபப்படுங்கள், கடவுளுடன் அந்த இரகசிய நெருங்கிய நட்பை புதுபித்துக் கொள்வதற்கு கிட்டச் சேருங்கள்.

## III கொய்நோனியா என்பதின் அர்த்தம்

பகிர்ந்து கொள்ளுதல் என்பதாகும்.

எருசலேம் தேவாலயத்தில் அவர்கள் அப்போஸ்தலர் உபதேசத்திலும். ஐக்கியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் உறுதியாய் இடைவிடாது தரித்திருந்தனர். இது அவர்கள் கிறிஸ்துவில் செழுமையான ஐக்கியம் உடையவர்களாயிருந்ததை காட்டுகிறது.



அவர்களுடைய ஐக்யத்திற்கும், பகிர்ந்து கொள்ளுதலுக்கும் முக்கிய காரணியாய் அவர்களுக்குள் பொதுவான வகுப்பவராயிருந்தவர் இயேசு கிறிஸ்து ஆவார். அவர்கள் இது கூடவே எப்படி அவர்கள் தத்ரூபமான முறையில் சரீரப்பிரகாரமான உரிமைகளை ஒருவருடன் ஒருவர் பங்கிட்டு கொண்டார்கள் என்பதைக்கூட அவர்கள் காட்டினார்கள்.

விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.

காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.

அவர்கள் ஒரு மனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி அப். 2:44–46.

நிலங்களையும் வீடுகளையும். உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்கு தேவையானதற்குத் தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. அப். 4:34–35.

ஒருவருடன் மற்றவர் பகிர்ந்து கொள்ளுகிறதான இது கொய்நோநியாவின் ஒரு பகுதியாயிருக்கிறது. அது நம்மிடையே இதுவரை இன்னும் இருக்கிறதா?

நான்கு வசனக் குறிப்புக்களுடன் நாம் இங்கே கருத்தை ஆராய்ந்து நிர்வகித்து ஒரு ஆவியின் பகிர்ந்து கொள்ளுதலை நிர்வகிக்கும்போது இன்னும் அது சரீரப் பகிர்ந்து கொள்ளுதலுடன் சம்பந்தப்பட்டுள்ளது.

மிகவும் கஷ்டத்துக்கு இடையில் இருந்த சந்நியாசிகளுக்காக எருசலேம் நகரத்தில் பொருட்கள் சேர்ப்பதைக் குறித்து மற்றும் வசனங்களின் கருத்தை ஆராய்ந்து பார்த்து லூக்கா மற்றும் அப்போஸ்தலரின் விவரிக்கப்பட்டுள்ளது. சற்றாகிலும் நாம் இந்நாட்களில் நம்முடைய ஐக்கியத்தில் ஆவியை பகிர்ந்துக் கொள்ளுகிறவர்களாக நாம் செய்ய நினைக்க வேண்டும். பொருட்களை பகிர்ந்துக் கொள்ளுகிற உரிமை குறைவான

எண்ணமுடையதாய் அதே அளவில் இந்த கொய்நோநியா பகுதியினுடையாயிருக்கிறது?

கர்த்தராகிய இயேசுவினிடத்திலும், எல்லா பரிசுத்தவான்களிடத்திலுள்ள உம்முடைய அன்பையும், உம்முடைய விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு

என் ஜெபங்களில் உம்மை நினைத்து எப்பொழுதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செய்து

உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறததினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்பட வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன். பிலே. 4–6.

இந்த அடிமையின் தலைவர் வெளிப்படையாக அவருக்காக ஒரு நல்ல சாட்சியாயிருக்கிறார்.

அவருடைய விசுவாசம் சகோதரர்களிடத்தில் உள்ள நிச்சயமான அவருடைய அன்பை காட்டுகிறது.

இந்த நிருபத்தில் பவுல் ஒருவராயிருப்பதை பற்றி எப்படி அதை கவனிக்கிறார் என்பதை குறிப்பிடுகிறார். பவுல் பிலேமோனுடன் அவருடைய நம்பிக்கையை வார்த்தைகளால் வெளிபபடுத்துகிறார். நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீரென்று அறிந்து இதற்கு நீர் இணங்குவீரென்று நிச்சயித்து உமக்கு எழுதியிருக்கிறேன் பிலே 21.

பிலேமோனை கடிந்துக் கொள்வதற்காக பவுல் இதை எழுதவில்லை. ஆனால் அவர் தவறான பெருமையில் இருப்பதாக பவுல் சொல்கிறார். அது மிகச் சரியாக இந்த விஷயத்தில் பிலேமோனுடைய அன்பையும், விசுவாசத்தையும் அவர் அறிந்திருந்தார். அவருடைய அந்த அடிமை வாழ்வில் எப்படி அவர் கவனிக்கப்பட்டார். மறுபடியும் இப்போது திரும்பியிருக்கிறார். பிலேமோனுக்கு வெளிப்படையாக எல்லா விதமான ஐக்கியத்தைக் குறித்தும் தெரிந்தவராயிருந்தார். பகிர்ந்து கொள்ளுதலைக் குறித்தும் தெரிந்த வராயிருந்தார்.



நாம் பிலேமோனைப் போலிருக்கிறோமோ? நாம் நம்முடைய விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்கிறோமா ஆகவே அதே அளவில் ஒருவருக்கு ஒருவர் தாங்குகிறவர்களாயிருக்கிறோமோ?

நாம் நம்முடைய ஆழ்ந்த வருத்தங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துக் கொண்டு, நம்முடைய பாரங்களை ஒருவருக்கு ஒருவர் தாங்கி, அடிக்கடி ஒருவருக்கு ஒருவர் இரக்கமுள்ள கண்ணீரை அபரிதமாய் பொழிகிறவர்களால் இருக்க வேண்டும்.

நாம் யாரை மிக நன்றாக அறிந்திருக்கிறோம்.

ஒருவருக்கு ஒருவர் நம்முடைய விசுவாசம் வளர்வதற்கு தேவையான வார்த்தையைக் கேட்பது அவசியமாயிருக்கிறது. நாம் ஒருவருக்கு ஒருவர் ரோமன் 8:28 னுடைய சகலமும் நன்மைக்கே என்ற வேத நன்மைகளை ஒருவருக்கு ஒருவர் பெற்றிருக்கிறோம். நாம் அழிவையே சந்திக்க நேரிட்டாலும், நம்முடைய ஒவ்வொரு அவயமும் மேற்கண்ட வசனத்தை பேச வெட்கப்படாது. நாம் உண்மையாகவே நம்முடைய விசுவாசத்தை பகிர்ந்து கொள்ள விருப்பமுள்ளவராய் கிறிஸ்துவுக்குள் எல்லாம் நன்மையாய் இருக்கிறது; என்ற ஞானத்தை பெருக்கிக் கொள்கிறவர்களாக, அந்த ஞானத்தில் வளர்ச்சியடைபவர்களாய் இருப்போம். நாம் இப்போது ஒருவருக்கு ஒருவர் வார்த்தையின்மூலம் செய்கையின்மூமலம் கிரியைகளின்மூலம் காணாத கடவுளின் மேல் நம்பிக்கை வைப்பவர்களாக காணப்படாத அந்த நித்யமான வீட்டின்மேல் எங்கள் நம்பிக்கையை பெலப்படுத்து காக்கிறவர்களாய் நாங்கள் என்ன பார்க்கிறோமா, அவைகளுக்காக, அச்சத்தால், ஒதுங்காதவர்களாய் இருப்போம்.

விசுவாசமானது நம்பப்படுகிறவர்களின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமிருக்கிறது.

எபிரேயர் 11:1.

விசுமானது தன்னம்பிக்கையும், திட நம்பிக்கையுமாயிருக்கிறது. ஐக்கியமாயிருப்பது என்பதின் அர்த்தம் உலகத்தில் உள்ள உபயோகமான எல்லாம் முக்கியப் பொருட்களையும் பகிர்ந்து கொள்வதாய் இது இருக்கிறது. அந்த அது எல்லாவற்றிலும் அபரிதமான ஒரு பரிமாணமாயுள்ளது.

அன்றியும் சகோதரரே மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூர்ண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள்.

மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன். தங்கள் உபகாரத்தையும் பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள். மேலும் நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்புத் தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்தார்கள். 2 கொரி. 8:1–5.

இந்த மூன்று வசனக் குறிப்புகளிலும் முதலாவது நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய விஷயம் என்னவாயிருக்கிறதென்றால் அந்த அவர்களுடைய பங்குகள், வீதங்கள் நிரந்தரமான சபை காணிக்கைகள் அல்ல. எருசலேம் நகரத்தில் உள்ள சகோதரர்கள் சரீரப் பிரகாரமான நஷ்டத்தில் கஷ்டப்பட்டபோது அவர்களுக்காக வசூல் செய்யப்பட்டதாய் அது இருந்தது.

நாம் இந்த வசனக் குறிப்புகளை, அல்லது அதனுடைய ஒரு பகுதியை கர்த்தருடைய வேலைக்காகவும், அவருடைய இராஜ்ஜியத்திற்கென்றும் காணிக்கைகள் என்று நாம் அவர்களுக்கு போதிக்க இவைகளை பயன்படுத்தலாம். இது ஒரு சரியான விண்ணப்பமாயிருக்கிறது. பரிசுத்தவான்களுடைய சரீர உபாதைகளை தீர்ப்பதற்குண்டான பொருட்களாய் நிஜமாகவே அது சம்மந்தமுடையதாய், ஒன்று சேர்க்கிறதாயிருக்கிறது என்று ஆனால் நாம் கண்டிப்பாக ஞாபகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். இது ஒரு வேளை ஒரு சிலருக்கு ஆச்சர்யமாயிருக்கலாம். இது கூட நம்முடைய கொய்நோனியா வின் ஒரு பகுதியாயிருக்கிறது. பங்கெடுத்து கொள்ளுதல் என்பது எப்படி மேலே மொழியாக்கம் செய்யப்பட்டு கொய் நோனியாவையிருக்கிறது – இது பார்ப்பதற்கு மிகவும் அழகானதாய் இணைக்கப்படாத



ஏழை பரிசு வான்கள் எருசலேமிலிருக்கிற அவர்கள் மெசபடோமியா இருக்கிறவர்களுக்கு உதவி செய்ததின்மூலம் அந்த அழகான காட்சியை பார்க்க முடிந்தது. ஆனாலும், அவர்கள் அன்றிலிருந்து இன்று வரை சகோதரர்களாய் இருக்கிறார்கள். மெசபடோமியாவில் இருக்கிறவர்கள் எருசலேமிலிருக்கிறவர்களுடைய உதவிக்காக எதிர்ப்பார்த்திருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் மிகவும் தங்களுக்கு தாங்களே தரித்திர முடையவர்களாய் வறுமையிலிருந்தார்கள். மலைப்பிரதேசமான அது தனக்குத்தானே வறுமையிலிருந்தது. செல்வமிழந்து தரித்திரத்திலிருந்து நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். ஒருவேளை அவ்விடத்தில் அவர்களால் அன்றிலிருந்து இன்று வரை கொடுக்க முடியவில்லையோ வீட்டில் அது தேவையாயிருந்தது. சரியாக அதே அளவில் அளவுக்கு அதிகமாக பிறகு உண்மையாகவே எருசலேமிலிருக்கிறவர் நாங்கள் உண்மையாகவே அவர்களை அறிந்திருக்கிறவில்லை. எங்களுக்குள் நாங்கள் மறுதலிக்கவில்லை. எங்களால் மறுதலிக்க முடியாது. அவர்கள் நன்மைக்காக, அவர்களுக்காக எப்போதும் எங்கள் பார்வையை அவர்கள் மேல் வைத்திருக்க முடியுமா? ஆயினும் அங்கே அவ்விடத்தில் அவர்களில் ஒரு சிலர் இதைச் சொல்கிறார்கள். அந்த ஆதாரமானது ஆட்சேபிக்கக்கூடாதாயிருந்தது. அதை அவர்கள் மிகவும் அமைதியாக அதிக சீக்கிரமாக தீர்மானித்தார்கள். சாட்சியானது அவர்களுடைய மிகுதியான சந்தோஷம், அவர்களுடைய மிக அதிகமான வறுமை அவர்கள் தாராளமாய் கொடுத்ததினால் மூழ்கிப் போனது. தேவனுடைய சித்தத்தின்மூலம் அவர்கள் கர்த்திருக்கும் எங்களுக்கும் தங்களுக்கு தாங்களே அவர்களை மனமுவந்து கொடுத்தார்கள்.

ஏன், நாம் எருசேமிலிருக்கிறவர்களுக்கிற உதவி செய்ய வேண்டும்? ஏனென்றால், அவர்களை அனைவரும் விசுவாசத்தில் நம்முடைய சகோதரர்களாயிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் பங்கெடுத்துக் கொண்டு, கொய்நோநியா என்பதின் முழு அர்த்தமும் என்னவென்று அறிந்திருக்கிறார்கள்.

நம்முடைய தன்னலத்தால் நாம் இழுக்கப்பட்டு சாத்தானுடைய தந்திர வலையான நம் சகோதரர்களுக்கு உதவிச் செய்யாமலிருப்பது, அதில் விழுந்து போவது இந்நாட்களில் மிகச் சாதாரணமாக காணப்படுகிறது. இந்திய தேசத்தில் நடக்கிற நம்முடைய அனாதைச் சிறுவர்களை பராமரிக்கிற வேலையை நாம் சொல்ல முடியும்.

அது உண்மையாகவே நமக்காகச் செய்யப்படும் வேலை அல்ல. அவர்கள் மிகவும் தூரத்தில் இருக்கிறார்கள். நாம் எப்போதும் அவர்களை பார்க்கவில்லை, நம் தேசத்தில் இங்கே ஏழைகள் இல்லையா? இப்படிப்பட்ட உதவிகள் செய்வதற்கு. ஆனால் நாம் அனைவரும் அவர்களுடன் சகோதரராய் இருக்கிறோம். ஒரே ஞானஸ்ஞானம் என்கிற சாக்கிரமெந்துவில் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறோம். மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும், புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துக் கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்ஞானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். ரோமர் 6:4–5.

இந்திய தேசத்திலிருக்கிற சிறிய குழந்தைகளாகிய அவர்கள் சி.எல்.சி.ஐ. யினாலும், பி.இ.எல்.சி. யினாலும் பராமரித்து, கவனிக்கப்பட்டு வருகிற அவர்கள் விசுவாசத்தில் நம்முடைய சகோதர, சகோதரிகளாகயிருக்கிறார்கள். நாம் எப்படி நமக்குத் தெரியாத ஒரு சிலருக்கு உதவி செய்யவில்லையே என்று எப்படி நமக்கு நாமே குற்றம் சுமத்திக் கொள்ள முடியும்?

கூட்டம் நடத்துகிற இடத்திலிருந்து மிகவும் ஏழ்மையான மலைப்பிரதேசங்களில் கூட்டம் நடத்துவதைக் குறித்து கேள்வியாக அது இருக்கக்கூடாது. நாம் எப்படி உதவி செய்ய முடியும்? என்பதை இன்றைய கேள்வியாக இருக்க வேண்டும்.

வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் எழுதியிருக்கிறபடியாகும். விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப் பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.

தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும். மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூர்ணமுள்ளவர்களாவீர்கள்.

இந்தத் தர்ம சகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்தரிப்பதினாலே சம்பூர்ண பலனுள்ளதாயும் இருக்கும்.



அவர்கள் இந்தத் தர்ம சகாயத்தினாலாகிய நன்மையை அனுபவித்து, நீங்கள் கிறிஸ்துவின் சுவிஷேசத்தைக் கீழ்படிதலோடே அறிக்கையிட்டிருக்கிறதினிமித்தமும், தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ் செய்கிறதினிமித்தமும், அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி 2 கொரி. 9:9–13.

இதைக் குறித்து கேள்விக்கே இடமில்லை. அதே அளவில் அப்படியே நீங்கள் விதைத்தால், ஆகவே அப்படியே நீங்கள் அறுப்பீர்கள். எருசலேம் திருச்சபையானது கொய்நோநியா என்றால் என்ன என்பதின் அர்த்தத்தில் முழுமையான விழிப்புணர்வு உள்ளதாக தங்கள் மத்தியில் இருக்கிற தேவையுள்ளவர்களை கவனிப்பதாக, பராமரிப்பதாக, பார்ப்பதாக இருந்தது. அவர்களுடையதை எல்லாவற்றையும், எல்லாப் பொருட்களையும் பொதுவில் வைத்ததின்மூலம் அவர்கள் தாராளமாய் விதைத்தார்கள். கொடுத்தார்கள். இந்தப் பொதுவான கருவூலத்திலிருந்து தேவையுள்ளவர்களுக்கு அதே அளவில் அப்படியே பங்கிட்டு கொடுத்தார்கள்.

மெசபடோமியோ, அசயா மற்றும் ரோம்மில் இருக்கிற சகோதரர்களிடத்திலிருந்து இப்போதுஎருசலேம் திருச்சபையானது அதிகமாய் அறுவடை செய்து கொண்டிருக்கிறது.

அங்கே அவ்விடத்தில் எருசலேமில் காய்ந்துபோன வெற்றிடம் இருக்கிறது. அதிகமாய் அறுவடை செய்ய விதைக்க வேண்டியது. அறிவுடைமையல்லவென்று நினைக்கிறார்கள். அனனியாவும், சப்பிராளும் அத்தகைய குறிப்பிட்ட ஜனங்களாயிருந்தார்கள். காலம் ஒருவனுடைய நேர்மையை நிரூபிக்கும். ரொட்டி துண்டுகளை பிய்த்து தண்ணீர்மேல் போடு நீ எதிர்பார்ப்பதற்கும் அதிகமாய் பலனை நீ காண்பாய். இந்த வாக்குத் தத்தமானது இப்போது கொரிந்தியர்களுக்கு செய்யப்பட்டுள்ளது. தாராள குணத்தினால், நீ உன் எல்லா வழிகளிலும் செழிப்பாயிருப்பாய்,

நம்முடன், நம் மத்தியில் தேவையுள்ள ஒருவரை நாம் பெற்றிருந்தால் என்ன? இதன் அடிப்படையில் கிறிஸ்துவுக்குள் நாம் ஒருவராயிருந்தால். நாம் நம்முடைய கரங்களை விரித்து உதவி செய்ய வேண்டாமா? சரீரம் சொல்கிறது. ஒரு சிலர் உதவி செய்வார்கள் என்று சமூகப் பாதுகாப்பு நிச்சயிக்கப்பட்டுள்ளதை நாம் சொல்வோம். அல்லது கொடுக்க முடியாமை, அல்லது சமூக நலத்திட்டங்கள்

அரசாங்கத்திலிருந்து வருவதாக நாம் சொல்வோம். ஆனால் நாமனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒருவராயிருப்பின், நாம் கண்டிப்பாக உதவி செய்ய வேண்டாமா?

ரோமர் 15:25–28ல் இவ்வகையான கொய்நோறியாவினுடைய வெளிப்பாட்டைக் குறித்து எழுதுகிறார். இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவிச் செய்யும் காரியமாக நான் எருசலேமுக்கு பிரயாணம் பண்ண எத்தனமாயிருக்கிறேன்.

மக்தோனியாவிலும் அகாயவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பம் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி செய்வது நல்லதென்று எண்ணினார்கள். இப்படிச் செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகளாகவும் இருக்கிறார்கள். எப்படி என்றால் புற ஜாதியார் அவர்களுடைய ஞான நன்மைகளில் பங்கு பெற்றிருக்க, சரீர நன்மைகளால் அவர்களுக்கு உதவி செய்ய இவர்கள் கடனாளிகளாயிருக்கிறார்கள்.

இந்த காரியத்தை நான் நிறைவேற்றி, இந்தப் பலனை அவர்கள் கையிலே பத்திரமாய் ஒப்புவித்தப் பின்பு, உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியுவுக்கு போவேன்.

ஒருவனுடைய பூமிக்குரிய பொருட்களால் சகோதரர்களுடன் பங்கிட்டுக் கொள்வதானது கடவுளுடைய ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதின் ஒரு பகுதியாயிருப்பது. ஆயினும் அவ்வேளையில் நமக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. இந்தச் சேகரிப்பு பரிசுத்தவான்களுக்கும், பிறகு அதில் பங்கெடுத்துக் கொள்கிற அனைவருக்குமிருக்கிறது. அப்போஸ்தலர்களும், மிஷனரி, பவுலும் இத்தகைய சேகரிப்பை எருசலேமுக்கு கொண்டு போனார்கள்.

இன்னும் அவர் எருசலேமை நோக்கி காணிக்கைகளை கொண்டு போனார்கள். இவ்விதியை பரப்புகிற வேளையில் பவுல் மிகவும் சுறுசுறுப்பாயிருந்தார். அவருடைய பத்திரிக்கைகளில் இவ்வகையான சேகரிப்புக்கு கொடுப்பதை ஊக்கப்படுத்துகிறவராகவும், இதைச் சேர்த்து குறிப்பிட்டிருக்கிறார். இது திருச்சபையில் நம்முடைய ஐக்கியத்தின் ஒரு பகுதியாகவும், கட்டாகவும் இருக்கிறது.



அந்த ஐக்யமானது ஜீவனுள்ளதாகவும், செயற்படக்கூடியதாகவும், இயங்க கூடியதாகவும், நகருகிற நம் விஷயமாகவும் இருக்கிறதை மறுபடியும் நாம் பார்க்கிறோம். அது ஒரு உயிரற்ற கடிதம் அல்ல. ஏனென்றால், அது சுவிஷேசத்தினுடைய் துள்ளுகிற ஆரம்ப இடமாகவும், அந்த கவிஷேசமானது ஜீவனுள்ளதாகவும், வாழ்கிறதாகவும் இயங்குகிறதாகவும் நகருகிறதாகவுமிருக்கிறது. ஐக்யமானது அசைவற்றதாயிருக்காது. ஆனால், இயங்கக்கூடியது. ஏனென்றால், ஆண்டவராகிய ஏசு கிறிஸ்துவின் அன்பு ஒரு இயங்கக் கூடியதாயிருந்து கிறிஸ்துவ ஜீவியத்தில் ஒரு வல்லமையுள்ள சக்தியாயிருக்கிறது. நாம் சுவரில் நம்பிக்கையுடையராய் நம்முடைய பாவங்களை அவருக்கு அறிக்கையிட்டு, பரிசுத்தத்திற்காய் ஜெபித்து, திருவிருந்து ஆராதனையில் பங்கெடுத்துக் கொண்டு நம்முடைய விசுவாசத்தையும், நம்முடைய பொருட்களையும் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்கிறோம்.

## IV. கஷ்ட கூட்டாளி - நம்முடைய ஐக்யமானது

சொந்தமான உறவாயிருக்க வேண்டும்.

பங்கிட்டு கொள்ளுதல், திருவிருந்து கிறிஸ்துவில் ஒருவர் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

யார் ஒருவர் மருத்துவமனையில் இருக்கிறார்களோ அவருக்காக ஜெபிக்க நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டாமா? இருதயத்தில் சந்தோஷமில்லாமல் ஆபரேஷன் செய்துக் கொள்ளப்போகிற நம்முடைய சகோதரருக்கு அந்த அறுவை சிகிச்சையின் வெற்றியடைய வேண்டாமா?

யார் பாவம் செய்யாமலிருப்பது நம்மை வருத்துகிறதா? மத்தேயு 18ம் அதிகாரத்தை ஞாபகப்படுத்திக் கொள்வோம். நாம் தீவில் இல்லை. ஆனால், நமக்கு நாமே மனித வர்க்கமாகிய பரந்து விரிந்த சமுத்திரத்தில் இருக்கிறோம். கடவுளுடைய சுவிஷேசத்தில் ஒருவரோடு ஒருவர் நாம் கூட்டாளிகளாயிருக்கிறோம். ஐக்யமானது கூட்டாளியானதாயிருக்கிறது.

சுவிஷேசம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால்

நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி,

உங்களில் நற்கிரியைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி – பிலிப் 1:3–5.

ஆயினும் எல்லா திருச்சபைகளும் பவுலுக்கு அவருடைய பிரயாணங்களில் அவருக்கு உதவியாயிருக்கும்படியும் பிரயாணம் செய்யும்படியும் உதவி செய்த ... என்பது எங்களுக்குத் தெரியாது.

எல்லாரும் செய்ததைப் போல் அது இல்லாமலிருக்கலாம். ஆனால் அங்கே அவ்விடத்தில் ஒரு குறிப்பிட்ட அவரை தங்கள் ஜெபங்களில் வைத்தும், அவர்களுடைய காணிக்கைகளால் அவருக்கு உதவியும் செய்து வந்தார்கள். பவுலுடன் அவர்கள் அனைவரும் கூட்டாளிகளாயிருந்தனர். பவுலினுடைய செயலாக்க பணிகள் எல்லாம் அந்தோக்கியா, சிரியா இந்நாடுகளில் ஒருவேளை இதை ஆதாரப்பட்டு இருந்திருக்கும் என்று நமக்குத் தெரியும்.

அது அந்தோக்கியாவிலிருந்தானது அந்த பவுலும், பர்னபாகும் சென்றதானது, முன்பாகவே பரிசுத்த அவியானவரால் அனுப்பப்பட்ட முதல் பிரயாணமாகும் அது. மற்ற திருச்சபைகள் மிகவும் சுறுசுறுப்பாக பிலிப்பு திருச்சபையிலிருந்தவர்கள் பவுலுடன் கூட ஐக்யப்பட்டிருந்தனர். அங்கே அவ்விடத்தில் அந்தத் திருச்சபையானது செல்வச் செழிப்பான ஒரு பெண்மணியினாலும், அவனுடைய குடும்பத்தாலும், சிறை அதிகாரி மற்றும் அவருடைய குடும்பத்தாராலும் ஆரம்பிக்கப்பட்டது. மெசபடோமியாவிலிருக்கிற ஒரு மனிதனின் தரிசனத்தின்மூலம் அவர் சைகை செய்து அழைக்கப்பட்டு பவுல் இரண்டாம் பிரயாணமாய் பிலிப்புக்கு வந்தார். இது பலவந்த தரிசனமாய் பவுலுக்கு இருந்தது. மெசபடோமியாவில் உண்டான முதற்கனியான திருச்சபையானது பலவந்தத்தால் வந்ததாயிருக்கிறது. பவுல் கஷ்டத்தில் இருந்தாலும், இல்லையென்றாலும், அவருக்கு அவர்கள் உதவி செய்தார்கள். அவர்கள் அவருக்கு சமயத்திற்கு உதவி செய்தார்கள். மறுபடியும் அவர்கள் அவருடன் சுவிஷேசத்தில் கூட்டாளிகளாயிருந்தனர். பிலிப். 4:14–18.



கிறிஸ்துவினுடைய திரு இரத்தத்தின்மூலம் நாமனைவரும் கடவுளுடன் ஒன்றாயிருப்பது என்ன ஒரு சந்தோஷமாயிருக்கிறது. அவருடைய திருச்சபையில் அவருடைய இரக்கமுள்ள கைகளின்கீழ் நாமனைவரும் ஒன்றாய் இணைந்து ஐக்யமாயிருப்பது என்ன ஒரு சந்தோஷமாயிருக்கிறது. இந்நாளில் நாமனைவரும் கூட கூட்டாளிகளாயிருக்கிறோம். பல மைல்களுக்கு அப்பாலுள்ள என்.சி.எல்.சி. எல்.சி.ஐ. பி.இ.எல்.சி. வெகுதூரத்தில் தாய்லாந்திலிருக்க ஜே.சி.எல்.சி அந்த அவர்களுக்கு நாம் சகோதரராயிருக்கிறோம். பிலிப்பியர்களைப்போலவே நான் உதவிகளை அனுப்புகிறோம். தேவனுடைய வார்த்தையை போதிப்பதற்காக நாம் உதவிகளை அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய திருச்சபைகளில் நாம் ஒன்று சேர்ந்து கடவுளுடைய இராஜ்ஜியத்திற்குண்டான வேலைகளை கொண்டு செல்கிற அலுவல்களுக்கு சார்பாக ஒருங்கிணைந்து வாக்களிக்கும்போது தீர்மானிக்கும்போது நம்முடைய கூட்டாளி முறையை காட்டுகிறோம். கடவுளுடையே வீட்டைப் பராமரித்து நல்ல முறையில் பழுதுப்பார்த்து சுத்தம் செய்கிற வேலையில் நாம் ஒருங்கிணைந்து வேலை செய்யும்போது நாமனைவரும் கூட்டாளிகளாயிருக்கிறோம். நாமனைவரும் நம்முடன் நம் இருதயத்திலும் கரங்களிலும் அவருடைய வார்த்தை பெற்றிருக்கிறோம். நம்பச் செய்வதற்கு கண்டனம் செய்வதற்கு அனுபவப்படுத்துவற்கு ஆலோசனை சொல்வதற்கு பயன்படுத்துவதற்கென்று அவருடைய வார்த்தைகளை உடையராயிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே கேட்டுக் கொள்வோம். ஆயினும் நாம் முழுமையான கூட்டாளிகளா, அரைப்பகுதியான கூட்டாளிகளா அல்லது ஒரு வேளை திருச்சபையின் ஐக்கியத்தில் அமைதியான சலனமற்ற கூட்டாளிகளா.

திருச்சபையினுடைய உறுப்பினராயிருப்பின், அவருடைய பணியில் கூட்டாளிகளாயிருந்தால், அதே அளவில் அப்படியே நிர்வாகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறதில் நாம் வாங்கமாட்டோம்.

பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையின்மூலம் நாம் திருச்சபையிலும் மற்றும் தலைமை ஸ்தாபனத்தின் ஐக்யத்திலும் நம்மை உறுப்பினர்களாக மாற்றியிருக்கிறது.

நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்து ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். பிலிப். 2:2.

நம் மத்தியில் இந்த அற்புதமான ஐக்கியத்தினுடைய வேலையை அது பரிசுத்த ஆவியானவர் ஒருவரால் மாத்திரமே செய்ய முடியும். அவர் நம்மை வார்த்தையின்மூலம் ஒரே சிந்தையுடையவர்களாய் நம்மை மாற்றுகிறார். கிறிஸ்துவினுடைய திருச்சபைகள் இந்நாட்களில் ஒழுங்கு கிரமமாய் இசைந்திருப்பதற்கு பதிலாக இசைவற்று இருப்பதை நினைத்துப்பாருங்கள். எப்படி அநேக திருச்சபைகள் ஒரு பலவகையான போதனைகளையுடையதாய், உபதேசத்திற்கு விதி விலக்காய் பரிசுத்த வார்த்தைக்கு, பரிசுத்த தரத்திற்கு முரண்பாடாய் அமைக்கப்பட்டு முரண்பாடான காரியங்கள் எப்படி அனுமதிக்கப்படுகின்றன என்பதை நினைத்துப் பாருங்கள். திருச்சபை திருவிருந்து மேசைக்குப் பதிலாக அநேக திருச்சபைகளில் காப்பி அருந்தும் கப் மேலோங்கி அதுவே ஐக்கியமாயிருக்கிறது என்பதை நினைத்துப் பாருங்கள். எங்கே அது மதத்திற்குப் பதிலாக பிரதானமான சமூகச் செயல்களாயிருக்கிறது. நாமனைவரும் பொறாமையினால் தனியாக பிரிந்து விடவில்லை. சண்டை சச்சரவுகளினால் பிரியவில்லை. பின்னால் குற்றம் சுமத்துவதினால் பிரியவில்லை என்பது எவ்வளவு ஆசீர்வாதமாயிருக்கிறது. நாமனைவரும் நம் மத்தியில் தேவனுடைய வார்த்தைகளை அவர்கள் படிப்பது அது மத வைராக்கியம் அல்லவென்று அழைப்பது மிகவும் கண்டிப்பாயிருப்பது, அல்லது தாராளமாயிருப்பது, அல்லது கண்டிப்பு இல்லாமலிருப்பது எவ்வளவு ஆசீர்வாதமானது. நாம் என்னவாயிருக்க வேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவர் ஒருவர் மாத்திரமே கிரியைச் செய்கிறார். அவர் நம்முடனும், நம்முடைய திருச்சபையிலும் கிரியைச் செய்கிறவராயிருக்கிறார்.

எச்சரிக்கை செய்யப்பட்ட அனைத்தையும் விட்டு ஒருவனுடைய விலகியிருத்தல், தவிர்த்தல் ஏனென்றால், அது ஒரு குறிப்பிட்ட ஆசீர்வதிக்கப்பட்ட ஐக்யமாயிருக்கிறது.

நம்முடைய ஐக்கியம் பரிசுத்த ஆவியானவருடையதாயிருக்கிறது.

சமாதானத்தில் இணைப்பில் கட்டில் பரிசுத்த ஆவியானவருடைய ஒருங்கிணைப்பாய் அது இருக்கிறது.

ஆதலால் கர்த்தர் நிமித்தம் கண்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால்



ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

உங்களுக்கு உண்டான அழைப்பினாலே, நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.

ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு அவர் எல்லார் மேலும்,

எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

கிறிஸ்துவினுடைய ஈவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. எபேசி. 4:1–7.

நாம் பெற்றிருக்கிற அந்த ஆவியினுடைய ஒருமையை, ஒற்றுமையை சரியாக நிர்வகிப்பதற்கு நாம் ஆர்வமுடையவராய் இருக்கிறீர்களா?

நாமனைவரும் ஒருங்கிணைந்து வேலை செய்வதே நம்முடைய கொய்நோநியா என்பதின் அர்த்தம் ஆகும்.

கீழே இடித்து தள்ளி விடுவதற்கென்று இல்லாமல் நாமனைவரும் மேலே கட்டி எழுப்புவதற்கென்று ஒருங்கிணைந்து பணியாற்றுவோம்.

பல வகையான வரங்களும், திறமைகளும் கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்து இருப்பது நம் மத்தியில் பொதுவான நல்லவைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதற்கே. மனுசர்களுடைய சரீரத்தை பவுல் உதாரணமாய் பயன்படுத்தி எபேசியர்களுக்கு விவரித்துச் சொல்லும்போது திருச்சபையானது எப்படி இருக்க வேண்டும் என்று விவரிக்கிறார்.

சரீரத்தின் பொதுவான நன்மைக்காக நம்முடைய சரீரத்தின் எல்லா பாகங்களும் ஒருங்கிணைந்து அதன் அதனுடைய வேலைகளை செய்கிறது.

அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படி செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைச் செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. எபேசி. 4:15–16.

நம்மைச் சுற்றியிருக்க மதக் காட்சிகளை எப்போது நாம் அளவெடுக்கிறோமோ அப்போது

நாமனைவரும் தொடர்ந்து தேவனுடைய வார்த்தையில் ஒருங்கிணைந்து அதே அளவில் கூட்டாளிகளாயிருப்பதானது உண்மையாகவே அதிசயமான கிருபையாயிருக்கிறது.

ஆயினும் நாம் நம்முடைய கற்பித்தலில் அசட்சையாயிருப்பது ஒரு விஷயமாயிருக்கிறது. எங்கே நன்மதிப்பு குறைவாயிருக்கிறதோ அங்கே சரியான நன்மதிப்பில்லா ஒரு பகுதியை இடத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

கொஞ்சம் அது ஆவியானவருடைய ஒருங்கிணைப்பாயிருக்கிறது. அது சாத்தான் யார் பிரிப்பதாயிருக்கிறது. சாத்தான் நாளாவாட்டத்தில், காலப்போக்கில் அவன் கொடுக்க கூடியதாயிருக்கிறது. நம்மை ஒருவருக்கு ஒருவராகவும், மற்றவரிடத்திலிருந்தும், கர்த்தரிடத்திலிருந்தும் நம்மை பிரிக்கிற ஒரு ஆப்பாக இடைச் செருகலாக அவன் நடத்துகிறான். அவன் தவறுகளையும், சம்மதமின்மையையும், ஒத்துப்போகாமையினுடைய விதைகளையும் விதைக்கிறான். ஏன் காணப்படுகிற திருச்சபைகள் பிரிந்து கிடக்கின்ற என்பதற்கு அவனே சரியான காரணமாயிருக்கிறான்.

அவனுடைய வழிகள், தொழில் நுட்பங்கள், மதுரமானவைகளை, ஆனால் எப்போதும் அபாயமானதாயிருக்கிறது.

நீ நம்முடைய கொய்நோநியாவிலிருந்து குறைவு படுவதற்கு அவன் ஒரு வேளை சத்தமுடன் பேசுவான், ஊளையிடுவான், உரத்த சத்தமாய் கூப்பாடு போடுவான், மற்றும் குஷிப்படுத்துவான். இரகசியமாய் பேசி நமக்கு ஆசை காட்டி இழுப்பான். நீ



ஒரு அமைதியான, சலனமற்ற கூட்டாளியாய் இருப்பதற்கும் அவன் ஒரு வேளை முயற்சி செய்வான். அந்த நாம் ஒரு வேளை கூட்டாளிகளாயில்லாதற்கு சமமானது. யார் ஒருவன் மனிதர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை அறிக்கை யிடுகிறானோ அவனை பரலோக இராஜ்ஜியத்தில் பிதாவுக்கு முன்பாக அறிக்கையிடுவார். அது தேவனுடைய வார்த்தைகளை பற்றிக் கொண்டிருப்பதின்மூலம் நாம் கற்பித்தலின்மூலம் அதை ஊற்றுவதினால் நம்முடைய விசுவாசத்தையும், கடவுளுடனும், பரிசுத்தவான்களுடனுமான நம்முடைய ஐக்யத்தையும் நம்மால் நிர்வகிக்க முடியும். பிறகு நம்மால் அவனை எதிர்த்து புரட்சி செய்யவும், அவனையும் அவனுடைய துன்மார்க்கமான தாக்குதலை மழுங்கச் செய்யவும் முடியும்.

<u>**தீர்மானம் :**</u>

நம்முடைய பாடத்தில் கொய்நோநியா அல்லது ஐக்யம் எவ்வளவு செயலாக்கம், இயக்கம் உடையதாயிருக்கிறது என்பதை நாம் பார்த்தோம்.

ஆக எல்லாவற்றிற்கும் மேலாக முதன் முதலாக பாவியான மனிதனுக்கும் – பரிசுத்த கடவுளுக்கும் உள்ள ஒருங்கிணைப்பாய், கடவுள் தனக்குத் தானே கிரியைச் செய்து விசுவாசத்தின்மூலம் தேவனுடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவின்மூலமான ஒருங்கிணைப்பாயிருக்கிறது. இந்த செங்குத்தான உறவானது சமநிலையான உறவுடன் இணைக்கப்படுகிறது. நம்முடைய பொதுவான விசுவாசத்தின் அர்த்தம் என்னவென்றால், அந்த நாமனைவரும் கூட ஒருங்கிணைந்து இருக்கிறோம்.

யார் அவர்கள் நாம் செய்கிறதையும் விசுவாசிக்கிறார்கள். நாம் அவ்வண்ணமான நெருங்கிய சிறப்பான ஐக்யத்தை சாக்கிரமெந்துவில் கடவுளுடான திருவிருந்தில் ஒருவரோடு ஒருவர் நமக்கிருக்கிற ஒருங்கிணைப்பை, ஐக்யத்தை அதே அளவில் நாமனைவரும் திருவிருந்து மேசைக்கு முன்பாக ஒருங்கிணையும்போது காட்டுகிறோம். விக்கிரகங்களை அசைப்பதற்கென்று நாம் நெருக்கமுடையவர்களாய் பங்கெடுத்துக் கொள்கிறோம். கிறிஸ்துவின் நாமனைவரும் ஒருவராய் இருப்பதற்கு கடவுளுடைய வார்த்தைகளை பேசுவதின்மூலமும், ஒருவருக்கு ஒருவர் உதவிகள் செய்து கொள்வதின்மூலம் நம்முடைய விசுவாசத்தை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்கிறோம்.

இருப்பினும், நம்முடைய உதவி இந்த ஐக்யத்தில் வார்த்தை அளவில் மாத்திரம் இல்லை. ஒருவருக்கு ஒருவர் பொருட்களாலும் உதவி செய்வதற்கு கூட நாம் பங்கெடுத்துக் கொள்கிறோம். தேவையில் இருக்கிற பரிசுத்தவான்களுக்கு நாம் பங்கு வீதம் கொடுக்கிறோம்.

சுவிஷேசத்தில் கூட்டாளிகளாய் ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கு நாம் ஜீவிக்கிறோம், பேசுகிறோம், மற்றும் செயற்படுகிறோம், பரிசுத்த ஆவியானவருடைய அழைப்பை அறிந்திருக்கிறோம், ஒன்று சேருகிறோம், ஞானமாய் போதிக்கிறோம், மற்றும் புனிதப்படுத்துகிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்யமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். 2 கொரி. 13:14;